*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Estabished: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 13TH MARCH, 1981 No. 11

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to :*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1981 - 3 - 17
PERIODICALS DIVISION

## Church News from abroad

**Soviet Clergy face better times**

A new tax rebate for clergy in the USSR has put clergymen into the same tax category as writers, artists and other creative professionals. The 15 per cent rebate means that the tax payable on a clergyman's salary of 300 roubles ($ 450) a month will drop from 100 roubles to 85 roubles.

The normal monthly industrial salary of the average worker is a little more than 165 roubles ($ 250).

The tax rebate will put the clergy further ahead of the average worker.

**African Women Theologians make history**

For the first time, theologically educated women leaders of Africa met at Ibadon recently to discuss issues of women and theology and the Ministry.

The major address was given by a medical doctor who pointed out that theological studies should be made available to women for the simple reason that they have "the closest and deepest responsiblity for each successive generation of human beings".

A Follow-up Consultation and a Five Year Plan of action to expand opportunities for the placement of women in the African Church were decided upon.

**The Third General Synod of the Church of England**

By 263 votes to two, the Synod has endorsed a Private Member's motion which deplored the reduction in official development assistance to poorer countries. (The present level of overseas assistance has dropped below 0.4 per cent of the GNP).

The Synod has asked the government to restore the cuts planned and to make substantial progress towards the target of 0.7 per cent of the GNP.

## Re-settlement Scheme for Sri Lankans

The government has launched a resettlement Scheme for Sri Lankans returning 'home' after a period of employment abroad.

The United Nations Fund for Population Activities (UNFPA) is ready to contribute £ 200,000 towards the project.

As a first step, basic data is to be collected from a thousand Sri Lankan families in the Middle East and a thousand families who have returned.

The main data collected will relate to the social profile of those who have returned and the skills they have acquired. It is a long term plan and will cover those returning home in the next 10 years.

## Chundikuli PTA becomes SDS

The Parents of the pupils of Chundikuli Girls' College held their annual celebrations on 13th January 1981. The highlights of the programme were an exhibition of models made by the school Energy Project Club — (Solar cookers, bio-gas generators, windmill, Economic hearths and fireless cookers) the opening of the new pavilion and classrooms block by Mrs. R. K. Jesudason an old girl on the Governing Body and the unveiling of plaques in three new buildings. The first plaque in the Principal's Bungalow unveiled by Mrs. C. A. W. Edwards was to commemorate her late husband who was the founder president of the school Welfare Association from 1961 to 1970; the second unveiled by the Ven. S. D. Horshington in the Hensman Memorial Hall had also the name of Mr. A. C. Canagarajah who was the consultant architect cum engineer of the building; the third unveiled in the Jubilee Block by Mr. J. M. Sabaratnam, the manager of the School was to commemorate the occasion when the building was opened by the former Principal Miss. S. T. Mathai in 1973 and also to thank the Contractors, Architect and Engineer M/s. T. Rajadurai and S. Senathirajah, V. S. Thurairajah and A. C. Canagarajah respectively.

At the business meeting which followed a new constitution renaming the Parent Teachers Association as the School Development Society was adopted and the new office-bearers elected.

## All-Island Bible Quiz

The annual Bible Quiz organized by the Bible Quiz Board and the National Council of YMCAs and sponsored by the Ceylon Bible Society, the National Catechetical Institute and the Christian Audio Visual & Literature Service is to begin on May 23rd. Children under the age of 16 (Seniors) and under 12 (Juniors) will compete in teams of four contestants on a "knock out" basis to answer questions on prescribed syllabi. Twelve zones of Sri Lanka will in a preliminary round select their best teams and send them to Colombo for the semi-finals and finals to be worked out on June 6th. The chief organizer is the Secretary Mr. Elmo Wijesinghe.

## Hostel Day at Jaffna Central

Mr. and Mrs. J. M. Selvadurai were the chief guests at the Hostel Union Dinner on 28-2-81. Mr. S. Sivatharman, the President presided.

Mr. N. S. Rathinasingham, the Principal in his speech referred to the services rendered by Mr. Selvadurai as Warden of the Hostel. The Boarders not only increased in numbers during his period as Warden but also showed marked progress in academic attainments and in sports.

Mr. Selvadurai expressed his thanks to the Principal, staff and students for the honour they have done to him and his wife.

— COR

*St. James Church, Nallur*

## Mr. A. J. Rajaduraisingham

"Painlesssly, Peacefully at night on a Sunday. The Boat slipped its moorings to make Port."

Mr. A. J. Rajaduraisingham passed into that blissful realm on this holy day (1st Dec.). His demise leaves a void in the whole community for he was a selfless and devoted worker, whether it was for the service of the public or the Church.

He hailed from a family of devout Christians and was brought up under the strict and disciplined control of a god fearing mother. He was by nature a very hospitable, tolerant and endearing person.

Thurai, as he was popularly known among his colleagues, had his education at St. John's College, Jaffna where he was popular both among his teachers and fellow students. While quite young he joined the Department of Co-operative Development and was a pioneer in spreading the gospel of Co-operation among the people from Trincomalee to Pottuvil in the Eastern Province in the nineteen forties with the late Mr. R. C. S. Cooke and his band of co-operative officers.

He was fearless as he acted according to the dictates of his conscience and inspired confidence among his friends and associates as he was true to himself. As Assistant Commissioner of Co-operative Development both at Kalmunai and Paranthan he contributed in no small measure for the development of the Co-operative Movement in these divisions.

In his retirement he took up the Presidentship of the Jaffna Municipality M.P.C.S. at a time when it needed an honest and capable administrator to straighten its declining trend and did succeed in his task. He also functioned as the Warden, of St. James Church, Nallur and he dedicated himself for this noble work as well till he was overtaken by illness.

Rajaduraisingham had a soft-heart for those in distress. He remained a bhramachari through out his life and spent a major part of his earnings in the relief of the poverty striken.

He believed in the words of a great writer that "one can achieve success only by leaving the world better than one found it."

May His Soul Rest in Peace.

**A Co-operator**

*Obituary*

## Mr. C. S. V. Sabaratnam

We regret to record the death of Mr. C. S. V. Sabaratnam of Uduvil at his daughter's residence at Batticaloa.

He was 95 years of age at the time of his death.

The Funeral Service was conducted by Rev. T. Jeyaseelan and Rev. Vethanayagam of the Methodist Church, Batticaloa.

His sons Messers S. V. Balasingam (Principal, Jaffna College) and Oliver Thuraisingam and daughter Mrs. Jebaratnam predeceased him a few years ago.

The family mourners were Mr. S. O. A. Somanader and Olive Somanader (daughter and Son-in-law).

## Asian Christian Consulation on Human rights

"People and Structures of Domination" is the theme of the Consultation called by the International Affairs Desk of the Christian Conference of Asia. The meeting took place at Kuala Lumpur, Malaysia from February 23rd to 28th and aimed to examine the structures of domination that underwine the heritage and traditions of Asian peoples, highlight issues of human rights and work out guidlines for joint action on the international level.

Mr. Silan Kadirgamer was one of the forty delegates from several Asian countries participating at this consultation.

*IN BRIEF*

- *Interviews* to select students for admission to the North Colombo Medical College — Sri Lanka's first Private Medical College commenced on 1-3-81. One hundred will be selected out of the 1100 who had applied. The College is due to open in October this year.

- *The Pension anamoly* caused by the payment of pensions to government servants who retired after 1-1-78 on the consolidated salary and on the basic salary to those who retired before 1-1-78 is an issue that is now before the government. If no redress is forthcoming, the government will be creating a new area of tension.

- *Mr. M. G. Ramachandran,* Tamil Nadu's Chief Minister is due to visit Sri Lanka in May after the budget sessions of Tamil Nadu's State Legislature. The Minister of Transport, Mr. Mohamed has renewed the invitation extended to him earlier when the Minister visited India recently.

- *The 83rd Birthday* of the Departed Tamil Leader, Mr. S. J. V. Chelvanayagam, Q. C. will be observed on March 31st, with the release of a book "தமிழா விழித்தெழு" (written by Mr. K. Gnanasoorian M. Sc.) both in Sri Lanka as well as in London and Boston, according to a news item in *Suthanthiran.*

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141 ] 13 — 3 — 1981 [ இதழ் 11

## அமைதி நிலவட்டும்

யாழ்ப்பாணத்தில் இந்த மாதம் மிகச் சோகமான சம்பவங்கள் பல்கலைக்கழகத்திலேயே நடைபெற்றன. மார்ச் மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் மார்ச் மாதம் 23-ம் திகதி வரை மூடப்பட்டது புதிய மாணவர்கள் ஆவலோடு பல்கலைக்கழகத்தில் இரண்டாந் திகதி காலடி எடுத்து வைத்தனர். நான்காம் திகதி எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. இத்தகைய அபாக்கியசாலிகளான மாணவர்கள் 1979-ம் ஆண்டு புகுமுகப் பரீட்சையில் தோன்றி சித்தியடைந்தவர்கள். நியாயமாக அவர்கள் 1980-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பல்கலைக்கழகம் செல்ல வேண்டியவர்கள். அரசாங்கத்தின் குழப்பமான கொள்கைகளினால் 1981-ம் ஆண்டு மார்ச் மாதமே பல்கலைக்கழகம் வந்தனர். இப்பொழுது திரும்பச் சென்றுவிட்டனர்!

பல்கலைக்கழக ஆசிரியர்களும் அரசியற்றலைவர்களும் திண்ணைவேலி மக்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையில் ஒரு சமரசத்தைக் கொண்டுவர முயற்சி செய்து வருகின்றனர். யாழ்ப்பாண வளாகம் பேராதனைக்கு அடுத்ததாக மிகப் பெரிய வளாகம் என்று கூறப்படுகின்றது. எனவே பல்கலைக்கழகம் வேண்டியளவு நிலத்தைப் பெற்றிருக்கவில்லை; பிறர் இங்கு நிலைகொண்டிருக்கின்றனர், அவர்கள் வெளியேறவேண்டும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. ஆனால் பல்கலைக்கழகத்தைச் சூழ்ந்திருக்கும் பிறமக்கள் பல்கலைக்கழக மாணவர்களை இரக்கமின்றிச் சுரண்டி வருகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். வீட்டு வாடகை, உணவுப் பொருள், அத்தியாவசிய சேவைகள் என்பன நியாயமற்ற முறையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன. வெளியார் பலமுறை பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கியிருக்கின்றனர் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவொன்றாகும். பல மாதங்களாகப் புகைந்து கொண்டிருந்த நெருப்பு இம்மாதம் மூன்றும் திகதி பயங்கர ரூபத்தில் வெடித்துள்ளது.

அமைதியை ஏற்படுத்தி பல்கலைக்கழகத்தினை மீண்டும் இயங்க வைக்க அதிகாரிகள் முயன்று வருகின்றனர். அவர்களை நாம் மனதார வாழ்த்துகின்றோம். நமது பல்கலைக்கழகம் நமது கல்வியின் மூலைக்கல். அதின் வாழ்வும் ஏற்றமுமே எமக்குப் பெருமை எனவே சம்பந்தப்பட்டவர்கள் ஒழுங்கையும் அமைதியையும் பாதுகாத்து, யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் ஏறுபோற் பீடு நடை போட வழி செய்வார்களாக.

## சபை — கடவுளின் சனம்

[ யாழ். ஆதீனத்தின் 34ஆம் வருடாந்தக் கூட்டத்தில் கலாநிதி கனம் விக்ரர் பிரேமசாகர் அவர்கள் நிகழ்த்திய ஒரு விசேட உரையின் சாராம்சம். ]

புரொட்டஸ்தாந்து சபைகளிலே "சபை" என்பது போதிய சாத்திரத்துடன் சிந்திக்கப்படாத ஒன்றாயிற்று. "சபை"யைக் குறித்துப் பேசவும் தயங்குகிறோம் என்னலாம். ஏதோ ஒரு வகையில் "சபை" கடவுளுடைய இராச்சியம் அல்ல என்ற ஒரு சிந்தனையும் பரவுவதாயிற்று. கடவுளுடைய இராச்சியம் வருவதற்கு முன்னான "ஓர் இடைக்கால ஏற்பாடு"தான் சபையெனச் சிந்திப்பாருமுண்டு.

வேறு பல விடயங்களைப் பற்றியும் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. சபையின் தன்மை, சபையின் வேலை ஆகியவற்றை விளங்க வைக்கும் நூல்களோ, இருப்பினும் மிகச் சிலவே. மிஷன் ஸ்தாபனங்கள் தாம் வேலை நடத்திய இடங்களில் மிஷனரி சங்கங்களை நிறுவினார்கள். நாமும் அதைப் பின்பற்றும் அபாயத்திற்குள்ளாகிவிட்டோம். இந்தியாவிலே ஆங்கிலேயத் திருச்சபையைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர், திருச்சபையின் சில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தியாவின் சபைகள் அனைத்தும் ஒரு சங்கமாய்ச் சேர வேண்டுமெனச் சமீபத்திலே ஓர் ஆலோசனை கூறினார்.

"சபை" என்றால் "ஒரு சமுதாயத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடவுளின் சனக்கூட்டம்" என்பது வலியுறுத்தப்பட வேண்டியதவசியம். எங்கு பார்ப்பினும் கிறிஸ்த சபை ஒரு சிறுபான்மைக் கூட்டமென்பதை நாம் அறிவோம். எனினும் அது எவர் மத்தியில் வைக்கப்பட்டுள்ளதோ அவர்களின் தேவைகள், வேட்கைகள், விருப்பங்கள் ஆகியவற்றிற் கரிசனை கொண்டு செயலாற்றும் ஒரு கூட்டமாயும், அன்பையும் ஒளியையும் பரப்பும் ஒரு குழுவாயும் இருப்பதவசியம். எபேசியர் நிருபத்தின் நாலாம் அதிகாரத்திலே சபையைக் குறித்து மிக விரிவாய்த் தரப்பட்டுள்ளதைப் பாருங்கள். சபை எந்தச் சமுதாயத்தின் மத்தியில் வைக்கப்பட்டுள்ளதோ அங்கே கடவுளின் இராச்சியத்தின் அறைகூவலை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

சபையைக் குறித்து நாம் பேசும்போதெல்லாம் அதன் அமைப்பு, நிர்வாக ஒழுங்குகள் முதலியவையே நம் மனதில் முதலிடம் பெறுவதால் உயர் மட்டத்தில் (அதாவது சினட் மகாசபை, ஆதீனங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில்) செவ்வையான நடைமுறைகள் கையாளப்படுகின்றன. ஆனால் சமுதாயத்தின் மத்தியில் வைக்கப்பட்டுள்ள தனித்தனிச் சபைகளைப் பொறுத்த அளவில், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, ஒருவரோடொருவர் பகிர்ந்து வாழ வேண்டிய அழைப்பைப் பொதுவாகக் கரிசனைக்கெடுக்காது போனோம். எங்கே இப்பேர்ப்பட்ட தனிச் சபைகளின் கிறிஸ்தவர்கள் பிறருடன் பகிர்ந்து வாழத் தொடங்குகிறார்களோ அங்கே திருச்சபை உயிருள்ளதாய்ச் செயல்படுவதைக் காணலாம். இந்தியாவின் பல பாகங்களிலும் இப்பொழுது உயர்குல இந்துக்கள் ஞானஸ்நானம் பெறக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் மத்தியிலே வைக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட சபைகள் பொதுஜனங்களின் விடயமாய்க் கொள்ளும் கரிசனையும் சேவை மனப்பான்மையுமே இதற்குக் காரணம் எனலாம்.

கடவுளின் சனமாகிய சபையைக் குறித்துப் பொதுவாக மூன்று காரியங்களை நாம் குறிப்பிட வேண்டும்.

1. சமுதாயத்தின் மத்தியில் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட சபையும் ஆழமான அந்நியோந்நியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகளில் காண்பது போல ஒருவர் பிரச்சனைகளை ஒருவர் தீர்த்து, ஒருவர் பாரங்களை ஒருவர் சுமந்து, ஒருவருக்காக ஒருவர் செபித்து — இப்படியே கிறிஸ்துவின் சிந்தையை வெளிக்காட்டுகிறவர்களாக வேண்டும்.

2. சபையின் கற்பித்தல் ஊழியம் செவ்வனே நடைபெற வேண்டும். இதைச் சபைகள் கவனியாமல் விட்டுவிட்டன. ஆராதனையின் பிரசங்கத்தை விட வேறெந்தக் கற்பித்தலும் நடைபெறுவதாய்த் தெரியவில்லை. கிறிஸ்தவர்கள் தமது விசுவாசத்தைக் குறித்துக் கற்பிக்கப்பட வேண்டியது மிக அவசியம்.

3. தனிப்பட்ட ஒவ்வொரு சபையும் தனது பொருளாதாரங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் ஒன்றாக வேண்டும். தேவைப்பட்டவர்களுக்காகச் செபிப்பது நல்லது; எனினும் போதாது. நாமாகவே நமக்குள்ளவற்றிலிருந்து பகிர்ந்து கொடுத்துதவுகின்றவர்களாக வேண்டும். நமது பொருளுடைமைகள், சிலாக்கியங்கள், பதவிகள் முதலியன சமுதாயத்திலுள்ள பிறரின் தேவைகளையும் பூர்த்தி செய்ய உபயோகிக்கப்படுவதினால்தான் சபையும் சீவனுள்ள ஒரு சமுதாயமாயிருக்கும் — கடவுளின் சனத்திரளான ஒரு கூட்டமாயிருக்கும்.

### சபைச் செய்திகள்

### நெடுந்தீவு — வாழ்த்துபசாரம்

சென்ற மாதம் 28ஆம் திகதியன்று தமது உதவிக் குருப் பட்டத்தைப் பெற்ற நெடுந்தீவுத் திருச்சபை ஊழியன் கனம் S. C. ஆர்னல்ட் அவர்களைக் கௌரவிக்கும்முகமாக அச் சபையினர் இம் மாதம் 8ஆம் திகதியன்று வாழ்த்துபசாரக் கூட்டம் ஒன்றை நடாத்தினர்.

அன்றைய காலை ஆராதனை திருவிருந்து ஆராதனையாகச் சேகரக் குரு கனம் T. S. பிரேமராஜா அவர்களினால் நடத்தப்பட்டது. ஊழியன் கனம் S. C. ஆர்னல்ட் அவர்கள் ஆராதனையிற் பிரசங்கம் செய்து, திருவிருந்து பரிமாறவும் உதவினார்கள். ஆராதனையைத் தொடர்ந்து உபசாரக் கூட்டம் ஒரு சிற்றுண்டி விருந்துடன் ஆரம்பமானது.

திரு. S. கணேசதாசன், செல்வி K. வைத்தியநாதர், செல்வி E. ஜெயசீலி ஆகியோர் ஊழியனின் தன்னலங் கருதாச் சேவையைப் பாராட்டிப் பேசி, அவர்களுடைய பிரசங்கத் திறமையும், பலதரப்பட்ட பிற ஊழிய வகைகளும் அநேகருக்கு ஆசீர்வாதமாய்த் திகழ்ந்தன வெனக் கூறினார்கள். ஊழியனுக்கும் குடும்பத்தினருக்கும் தமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, அவர்களுடைய சேவை இன்னும் வளர்ந்தோங்க வேண்டுமென ஆசி கூறினார்கள். ஊழியனுக்கு ஓர் அன்புக் கொடையும் வழங்கப்பட்டது. ஊழியன் சபையாரின் நல்வாழ்த்துக்களை மெச்சிப் பதிலளித்தனர்.

### நெடுந்தீவுச் சபையில் புதிய ஞாயிறுப் பள்ளி

நெடுந்திவுச் சபையின் ஆதரவில் நெடுந்தீவின் கிழக்குப் பகுதியில் ஒரு புதிய ஞாயிறுப் பள்ளி சென்ற மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிறிஸ்த சபையைச் சேராத பிள்ளைகள் சுமார் 28 பேர் கிரமமாக இந்தப் பள்ளியிற் சமுகமளிக்கின்றனர். மேற்படி சபையைச் சேர்ந்த திரு. எட்வேட் பொன்னுத்துரை அவர்களின் இல்லத்தில் நடைபெறும் இந்த ஞாயிறுப் பள்ளியை சபை ஊழியன் கனம் S. C. ஆர்னல்ட் அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

இந்தப் புதிய பள்ளியின் பிள்ளைகளுக்குக் கொடுத்துதவக் கூடிய பழைய கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களையும் வேறு படங்களையும் ஊழியன் கனம் S. C. ஆர்னல்ட் அவர்களிடம் அனுப்பியுதவுமாறு தாரகையின் வாசக நண்பர்கள் அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

### காரைநகர் — எழுப்புதற் கூட்டம்

சென்ற மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமையன்று காரைநகர்த் திருச்சபையில் எழுப்புதற் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கொழும்புத் திருச்சபையின் வாலிபர் ஐக்கியத்தைச் சேர்ந்த இருபது பேர் கொண்ட தூதுக் கோஷ்டி ஒன்று அத்தருணம் சமுகமாயிருந்து கூட்டங்களை நடத்த உதவியது.

காலை 8-30 மணிக்கு நடந்த தியான வழிபாட்டுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. வழிபாட்டைத் தொடர்ந்து, "கிறிஸ்தவ சீஷத்துவம்" என்ற விடயத்தில் ஒரு வேதப் படிப்பு நடத்தப்பட்டது. சாயந்தரக் கூட்டங்களில் கொழும்பு வாலிபர் ஐக்கியக் கோஷ்டியினர் சபையின் வாலிபர் ஐக்கியத்தினருடனும், பெண்கள் ஐக்கியத்தினருடனும் கைத்துறையாடல்கள் நடத்திச் சபைகளின் ஊழியவகைகளைக் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். கூட்டுச் சேர்ந்து தியானப் பாடல்களும் பாடினார்கள்.

மாலை 5-00 மணிக்குப் பகிரங்கக் கூட்டமும் விழாவும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன. "மன்னிப்பு", "தீபக் திருந்துகிறான்" என்ற இரு சிறு நாடகங்களும், காரைநகர்ச் சபை ஞாயிறு பள்ளியினரும் சேர்ந்தளித்த வேறு பல நிகழ்ச்சிகளும், ஆத்ம எழுச்சிக்குரிய கூட்டுப் பாடல்களும் இவ்விழாவில் இடம்பெற்றன. நிகழ்ச்சிகள் அனைத்தும் சபையாராலும் பார்க்க வந்திருந்த பிறராலும் மிகவும் மெச்சிக்கொள்ளப்பட்டன. நிகழ்ச்சிகள் யாவையும் சபைக் குரு கனம் T. S. பிரேமராஜா அவர்கள் பொறுப்பாயிருந்து நடத்தினார்கள்.

# சிலுவையின் சுவிசேஷம்

— அருள்திரு கலாநிதி ஜேம்ஸ் மேதர் —

இயேசு பிறந்தபொழுது, தேவ தூதர் வானத்தில் தோன்றி, "எல்லா மனிதருக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி" என்று பாடினுர்கள். அவர் சிலுவையில் அறையப்பட்ட பொழுதும் அவர்கள் தோன்றி இதே பாட்டைப் பாடியிருந்தார்களானுல் அதுவும் ஏற்றதாயிருந்திருக்கும். அவருடைய சிலுவை உலகத்திற்கு நற்செய்தியைக் கூறுகிறது. இது எவ்வாறு? சிலுவையின் சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்ன?

(1) உலகத்தவர் மேல் கடவுள் கொண்டுள்ள ஆழமான அன்பையும் கரிசனையையும் சிலுவை கூறுகிறது. "பாவிகள், கலகக்காரர் — எனக்கு எதிராக எழும்பினுர்கள் — அவர்களை அழிப்பேன்" என்று கடவுள் சொல்லவில்லை. காணுமற்போன ஆடுகளைப் போன்றவர்களை நான் தேடிக் கண்டுபிடித்து, மறுபடியும் என்னுடைய பிள்ளைகளும் சுதந்திரவாளிகளுமாய் ஆதாயம் பண்ணுவேன் என்று குமாரனைக் கடவுள் இவ்வுலகிற்கு அனுப்பினுர்.

(2) கடவுள் நம்மேல் வைத்த அன்பு சுயபலியிடும் அன்பு என்று சிலுவை போதிக்கின்றது. யோவானின் சுவிசேஷம் 3:16 ஐயும் 15:13 ஐயும் பாருங்கள். தன்னை மறந்து சுய ஆதாயத்தைத் தேடாமல் சிலுவையில் நமக்காகப் பாடுபட்டு மரித்தவர்மேல் எங்கள் அன்பைப் பதிப்பது, அவர் நம்மேல் வைத்த இந்த அன்பே.

(3) இயேசு மரித்த சிலுவை ஒரு பெரிய மின்கலத்தைப் (Battery) போன்றது. இங்கிருந்து அவரை விசுவாசிக்கிறவர்கள், பெலசாலிகளாகவும் பெரிய காரியங்களைச் செய்பவர்களாகவும் இருப்பதற்கு அது தெய்வ பலனைக் கொடுக்கிறது.

(4) சிலுவையின் அழைப்பு, அவரைப் பின்பற்றுகிற நாம் சிலுவை சுமப்பவர்களாக மட்டுமல்ல, அவரைப்போன்று சிலுவையில் அறையப்பட்டு மரிக்கவும் ஆயத்தமாகவும் இருக்கவேண்டும் என்பதாகும்.

கிறிஸ்தவ ஜீவியம், சந்தோஷமான காரியங்களை மாத்திரமல்ல, பல வேளைகளில், பெருமூச்சையும், துயரத்தையும் சந்திக்கவேண்டிய ஒன்ருகும். ஆனுல் எந்த நிலையிலும் தைரியமாய் வெற்றிக்கீதம் பாடச்செய்கிறது.

பரி. பவுலைப் பாருங்கள் — ரோமாபுரியிலுள்ள சபையார் அவருக்கு அதிக கஷ்டங்களைக் கொடுத்தனர். ஆனுல் ரோமர் 8:35—39 இல், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ வியாகுலமோ, துன்பமோ, பசியோ ......... பட்டயமோ? இவற்றிலெல்லாம் நம்மில் அன்பு கூருகிறவராலே பிழைக்கிறோம்......" என அவர் எழுதியிருப்பதைக் காண்கிறோம்.

என்னுடைய நீண்ட அனுபவத்தில், சென்ற 67 வருடங்களாக, நான் பலவித கஷ்டங்களையும் சந்திக்க நேர்ந்தது. என்ன வந்தாலும், யார் எதிர்த்தாலும் ஒன்றுக்கும் அசையாமல் ஊழியத்தைச் செய்யும்படி செய்த இரகசியம், இயேசுவின் சிலுவையே. அவர் தன் சிலுவையைத் தன் சிங்காசனமாக மாற்றினுர். முத்திரை போட்டு மூடிய கல்லறை, வெற்று அறையாய் மூன்ரும் நாள் இருக்கச் செய்த பிதா, இன்றும் அவ்வாறு செய்கிருர் என்று அனுபவத்தில் கண்டேன்.

இதுவே சிலுவையின் பெரிய நற்செய்தி. அவர் இன்றும் கூறுகிருர் :- "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனுலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்". (யோவான் 16:33) இன்று, சபையின் ஊழியத்திலும், குடும்ப ஜீவியத்திலும் அனேகருக்குத் துன்பங்கள், கஷ்டங்கள் நிறைந்திருக்கின்றன வென்பது எனக்குத் தெரியும். ஆனுல் என் அனுபவத்திலிருந்து நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் :- ஒன்றையும்பற்றிப் பயப்படாதிருங்கள். உங்கள் முழு நம்பிக்கையையும் சிலுவையில் மரித்தும், மூன்ரும் நாள் உயிர்த்தெழும்பி என்றும் உயிரோடிருக்கும் இரட்சகர் கரத்தில் ஒப்படையுங்கள். அவர் செய்யும் அற்புதங்களை, நான் கண்டது போல் நீங்களும் நிச்சயமாய் அனுபவிப்பீர்கள். இதுவே சிலுவையின் பெரிய நற்செய்தி இது.

## செய்திகளின் சாரம்

### விலையுயர்வு

பாண், மா ஆகியவற்றின் விலைகள் முறையே ரூபா 2-05 இல் இருந்து 2-30 ஆகவும், 5-22 இல் இருந்து 5-50 ஆகவும் (10 ஆம் திகதி தொடக்கமாக) அதிகரிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ள மாவரைக்கும் சாலையின் உற்பத்தி விலை அதிகரிப்பே இந்த விலையுயர்வுக் காரணம் என்கிருர்கள். மா அல்லது பாண் நாளுக்கு மூன்று இருத்தல் வரை உபயோகிக்கும் ஒரு சிறு குடும்பத்திற்கு இந்த விலையுயர்வினுல் விளையும் அதிகப்படியான செலவு மாதத்திற்கு ரூபா 24-50 போலாகும்.

* *

### அடையாளச் சீட்டு

இலங்கையரையும் பிறரையும் பிரித்துக் காட்டுவதையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருந்த சுதேசிகள் அடையாளச் சீட்டு, இப்போ பல தேவைகளுக்கும் உபயோகமாகிறது. எனினும் வயதாஞேர் இதைப் பெற்றுக்கொள்வதினுல் காலதாமதமும் சிரமும் ஏற்படுவதால் பிள்ளைகளின் பிறப்பைப் பதிவு செய்யும் போதே அவர்களுக்கான சுதேசிகள் அடையாள இலக்கத்தைக் கொடுத்துவிடும் ஒரு புதிய முறை கையாளப்படவிருக்கிறது. பதினுரும் பராயத்தை அடையும் போது அவரவர்க்கான அடையாளச் சீட்டுகள் வழங்கப்படுமாம்.

* * *

### மின் சக்தி வெட்டு

சில நாட்களாக நாளுக்கு நாலு மணி நேர வீதம் துணிக்கப்பட்டுவந்த மின்சக்தி இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கமாக பகலில் 4½ மணி நேரமும் இரவு வேளையில் 1 மணி நேரமுமாக 5½ மணி நேரம் துணித்துவிடப்படுகிறது. மழையின்மை காரணத்தால் மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில் நீரளவு குறைந்து போனதே இதற்குக் காரணம். மின் உபயோகத்தைக் குறைக்குமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோள்கள் போதியளவு பலனளிக்கவில்லை, விரைவில் போதியளவு மழை நீர்த் தேக்க வளையங்களில் வராது போனுல் மின் வெட்டு நேரம் இன்னும் அதிகரிக்கப்படலாம். இது நாடனைத்துக்கும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்க ஏதுவாகும்.

## மரணம்

### கனம் S. P. விஜயரத்தினம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாணச் சபைகளில் சுமார் 45 வருட காலமாய் நல்லூழியம் புரிந்து ஓய்வு பெற்றிருந்த கனம் S. P. விஜயரத்தினம் அவர்கள் சென்ற பெப்ரவரி மாதம் 20ஆம் திகதியன்று மறுமைக்குட் பிரவேசித்தார்கள். பெங்களூர் ஐக்கிய திருமறைக் கல்லூரியில் தமது இறையியற் படிப்புக்களை முடித்து வந்த இவர்கள் 1932 ஜூன் மாதத்தில் யாழ்ப்பாணச் சபாசங்கத்தில் ஊழியஞகச் சேர்ந்து 1938ஆம் ஆண்டில் குரு அபிஷேகம் செய்யப்பட்டார்கள். சபாசங்கத்திலும் பின் ஏற்பட்ட ஆதீனத்திலும் பல சபைகளில் நற்பணி புரிந்த இவர்கள் 1978 ஏப்ரல் மாதத்தின் இறுதியில் வேலை ஓய்வு பெற்று தனது கடைசிக் காலங்களைத் தனது மருமக்களான S. ஜெபநாயகம் தம்பதிகளின் வீட்டில் செலவிட்டார்கள்.

போதகர் அவர்களின் மெய் நல்லடக்க ஆராதனைகள் 22-2-81 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு மானிப்பாய்த் தேவாலயத்தில் ஆரம்பமாயின. மகா கனம் D. J. அம்பலவாணர், அத்தியட்சர் அவர்கள் ஆராதனையை நடத்த, சபைக்குரு கனம் Sam தம்பு உதவிபுரிந்தனர். கனம் D. R. அம்பலவாணர் பிரசங்கம் செய்தார்கள். காலம் சென்ற போதகரோடு பல வாண்டுகளாக மிக நெருங்கிப் பழகியவரும், இளைப்பாறிய அத்தியட்சருமான மகா கனம் ச. குலேந்திரன் அவர்கள் போதகரின் உத்தம சீவியத்தையும் உன்னதமான ஊழியத்தையும் குறித்துப் பாராட்டுரை வழங்கிஞர்கள்.

நல்லடக்கம் மானிப்பாய்ச் சபைச் சேமக்காலையில் அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களினுல் நடத்தப்பட்டது. அவர்கள் ஊழியம் புரிந்த பல சபைகளிலுமிருந்து சபையாரும் பிற நண்பரும், இன சனத்தவருமான ஏராளமானுேர் தமது இறுதி மரியாதை செலுத்தக் கூடியிருந்தனர். போதகர் அவர்கள் விட்டுப் பிரிந்திருக்கும் போதகர் அம்மாவுக்குத் தேவ சமாதானமும் கிட்டுவதாக.

* * *

### ஹறியற் மாணிக்கம் தம்பியப்பா

உடுவில் திருச்சபையின் பழமை வாய்ந்த அங்கத்தினரான திருமதி ஹறியற் மாணிக்கம் தம்பியப்பா அவர்கள் தமது 87ஆம் பராயத்தில் சென்ற பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமையன்று மறுமை வாழ்வடைந்தனர். தமது கடைசிக் காலம்வரையும் எவரையும் மலர்ந்த முகத்துடன் வரவேற்கும் ஒருவராயும் தன் விசுவாசத்தினுல் எழுந்த தைரியத்தோடு மரணத்தையும் எதிர்நோக்கிய ஒருவராயும் காணப்பட்டார்கள்.

இவர்களது மெய் நல்லடக்க ஆராதனை திங்கட்கிழமை பி. ப. 3-30 மணிக்கு அவர்களின் இல்லத்தில் சபைக்குரு கனம் N. W G. சுகுணராஜா அவர்களினுல் நடத்தப்பட்டது, கனம் V. S. D. சத்தியநாதன் அவர்கள் ஆராதனையில் உதவினுர்கள். கனம் சாம் அல்பிறெட் (சாம் அண்ணன்) பிரசங்கம் செய்ய கனம் D. R. அம்பலவாணர், கனம் A. C. தம்பிராஜா ஆகியோர் காலம் சென்ற அம்மாவின் வாழ்க்கை, விசுவாசம் ஆகியவை குறித்துப் பாராட்டுரை வழங்கிஞர்கள்.

நல்லடக்கம் உடுவில் சபைச் சேமக்காலையில் கனம் V. S. D. சத்தியநாதன் அவர்களின் உதவியுடன் சபைக்குருவினுல் நடத்தப்பட்டது.

அவர்களை விட்டுப் பிரிந்திருக்கும் மக்கள் செல்வி பவளராணி, செல்வி பாக்கியராணி (மத்திய தந்திக் காரியாலயம்), செல்வி ஜெயராணி (மத்திய தந்திக் காரியாலயம்), பேரமகள் செல்வி சகுந்தலா நேசதுரை ஆகியோருக்கு ஆண்டவர் ஆறுதல் அளிப்பாராக.

## புதிய பெருங்கோவில்

சென்ற செப்டெம்பர் 14ஆம் திகதி, கலிபோர்னியாவில் அமெரிக்க சீர்திருத்தத் திருச்சபை ஒரு பெருங்கோவிலை (ஆசன ஆலயத்தை) பிரதிஷ்டை செய்தது. "கிறிஸ்டல் கதீட்ரல்" எனப் பெயர் கொண்ட இவ்வாலயக் கட்டடத்தில் 10,000 யன்னல்கள் உண்டு. இவற்றில் பல 2 அடி உயரம், 6 அடி நீளமானவை. இவற்றின் கண்ணுடிகள் வெள்ளி மூலாம் பூசப்பட்டவை; எனவே வெளியில் நின்று பார்ப்பவருக்கு முகம் பார்க்கும் கண்ணுடி போலிருக்கும். உள்ளிருப்பவர்களோ வெளியே பார்க்கக் கூடியதாயிருக்கும்.

இக்கட்டடம் நாலு முனைகள் கொண்ட நட்சத்திர வடிவினதாகும். நீளம் 415 அடி, அகலம் 207 அடி, உயரம் 128 அடி. ஒரு ஏக்கர் நிலப்பரப்பிற் கட்டப்பட்டுள்ள இந்த ஆலயத்தில் வழிபாட்டு ஸ்தலத்திற்குரிய 44,000 சதுர அடி உட்பட 915000 சதுர அடி நிலப் பரப்பு உண்டு. வழிபாட்டு ஸ்தலத்தில் ஒரே வேளையில் 2890 பேர் உட்கார இடமுண்டு. இந்த ஆலயத்தின் இசைக் கருவி (Pipe Organ) இன்னும் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதாம். அதன் வேலை முடிய இன்னும் 2 மாதங்கள் வரையிற் செல்லும். ஏனெனில் இதன் இசைக் குழல்களின் எண்ணிக்கை 13,029. இத்தனைவு குழல்களும் 223 அடுக்குகளிற் பொருத்தப்படுகின்றன.

இந்த ஆலயத்தின் பிரதம குருவான கலாநிதி கனம் ரொபற் ஸ்குனர் என்பவர் பிரதிஷ்டை ஆராதனையிற் பிரசங்கித்த போது: "இந்த ஆலயம் மனிதரின் மகிமைக்காகக் கட்டப்பட்டது; அதனுல் கடவுளுக்கு இன்னு மதிகமான மகிமை உண்டாக வேண்டும்" என்ருர். அவர் கூற்றின் கருத்து என்ன? அந்த ஆலயம் கட்டுவதற்கு முன் 25 வருடங்களாக மக்கள் ஒரு சபையாய் அங்கே கூடினர். இனி அதிலே வணங்கப் போகின்றவர்கள் "உலகத்திற்குள்ளே சென்று, மக்களை விலைமதிப்பற்றவராய் எவரும் கணிக்கக் கூடாது என யாவரும் திட்டமாய் அறிந்துகொள்ளும் வரையும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவராய் இருப்பார்கள்" — இதுவே அச் சபையின் குறிக்கோள்! இதற்கிணங்க, பிரதிஷ்டை ஆராதனைகளிற் சேர்ந்த காணிக்கை முற்றும் மெக்சிக்கோ இந்தியர்களுக்கு ஒரு வைத்திய சாலை கட்டுவதற்குப் பிரத்தியேகப்படுத்தப்பட்டது.

[ஆதாரம் — "திருச் சபைத் தூது". சஞ்சிகை,]

EDITORIAL

## Discipline!

"*Sri Lanka could progress quicker and be more prosperous if she followed the discipline that was characteristic of the Japanese people.*"

So said President Jeyawardene speaking at the Banquet held in honour of Crown Prince Akihito and Princess Michiko of Japan at the President's Pavilion in Kandy.

It is a thought that needs a marked accent in our present 'climate' here in Sri Lanka. One tragic aspect of our national situation today is a carefree attitude and indiscipline in almost every sphere of life in the country.

Some of the salient points for instance made in the important speeches of our party leaders are often tainted by a nauseating refrain to a reference either to the ills of "the previous regime" of Mrs. Bandaranayake or to the present capitalist and bourgeois oriented schemes of President Jeyawardene.

No public utterance is considered complete without this invidious comparison. In this context, we are often reminded of an anecdote about Benjamin Disraeli who could not define on a public occasion the difference between 'misfortune' and 'calamity' except in these words:-

"If Gladstone fell into the river Thames, it would be a misfortune. If anyone takes him out, it will be a calamity."

Platform rhetoric apart (it often goes with the wind), callow and arrogant reporting makes a more sinister impact on the community, the effect of which causes much more damage to national harmony than any other factor in this country.

"The *Northerner* sees his Premier" (we wonder if the Southerner has another Premier) may not be as insinuating a headline as a reference to "a good will mission penetrating the island's *insulations*" or the news report of the mass rally in Jaffna on the climactic day of the Prime Minister's visit which runs thus:—

"It was a memorable day in Jaffna—a day that drew the people of Jaffna from the shell of *separatist policies to the main stream of national life.*"

'Discipline' entails that not merely platform rhetoric as indulged in by party leaders but reporting as done by the mass media in our country become keenly sensitive to what Paul Dubois calls "*the therapy of words.*"

A good example of 'discipline' as a national trait in Japan is provided by a visitor who in an article he has recently written to the Press about his visit, says that there are "pushers" detailed in Tokyo to regulate human traffic in the overcrowded subways.

But the "pushers" wear white gloves to avoid soiling anybody's clothes. How much of "*soiling*" — physical, mental and psychological is perpetrated in our country, with an utter disregard for human "personality".!

"Separatist policies", "insulations", "Northerners" "main stream of national life" are words and expressions which have very little, meaning if each community inhabiting this country is treated (as the Jeyawardene Government has oft times professed) *not as an instrument but as an end.* The development councils are intended to serve this very purpose.

It is a searing reality that there are still groups in the country which look down their narrow angle lenses and see no *obligation* towards people in their country whose histories and culture and civilisation are different.

But discipline as a trait has to be *cultivated* and as in the case of plants, we have first to sow the 'seeds' of discipline before we can think of cultivating and tending the 'plant'.

The unrest amounting to turbulence which has erupted in our Universities is an instance in point.

Among the sayings attributed to the sage Confucius is this very thought provoking word of counsel:— "a boy should never be allowed to see an instance of deceit".

The very fact that the new White Paper on Education is making provision for a new *Grade 13* is pointer to an uneasy conscience on the part of our planners of the inadequacy of the present Scheme of admissions to the University, in operation in the country.

Discipline is not a readymade food which like *manna* will fall down to us from heaven. We will have to first sow the 'seeds' for the 'plant' to grow (in the educational sphere, the political sphere, the economic sphere and the social sphere). What we sow we shall finally reap.

*Jaffna Diocesan Council*

## A Meaningful Ministry of the Church

*(a gist of Rev. (Dr.) Premasagar's Second Address at the Jaffna Diocesan Council on 27-2-81)*

Addressing the Jaffna Diocesan Council on the second day of the sessions, the CSI Synod General Secretary, Dr. Premasagar reminded the members of the historic comment about the Church Union in South India that it was "the greatest miracle since Pentecost"

The new Church continues today as 'a Pilgrim Church' — a Church working towards a still wider perspective of unity as the people of God.

The net is cast by the fisherman but to draw the net ashore with his catch, he needs the help of other fishermen. What shall be the nature of the 'help' we would need, how shall we deploy our resources in man-power, how shall we fix our priorities in relation to the issues that confront us.

These are some of the problems that will face us in the next decade (1981—1991) which would be a crucial period in the history of the Christian Church.

**Women's Ordination**

A matter for thanksgiving to God is that the women of the Church have today come to the fore and have equipped themselves for responsibilities in the Church to a degree unknown before. Women's Ordination for the Priesthood in the CSI, will soon be a reality, though misgivings have been expressed.

The same kind of misgivings were articulated when indigenous Bishops were about to be consecrated in the Church of South India. So long as women have proved themselves equal to their tasks in other walks of life, there is no reason to doubt their ability to rise up to the demands that would be made on them by the Ministry of the Church.

**Pattern of Ministries**

A problem which will increasingly emerge in the coming years. is whether the traditional pattern. of our ministries is adequate for our new tasks, in the context of the changing situations,

The new realities in our communities in an emergent Church entail new ministries.. We have unfortunately categorised our ministries, of Bishop. Presbyter and Deacon in an ascending order and thereby completely missed the whole meaning of the structure of the Church.

It is natural for a Deacon today to aspire to be a Presbyter and a Presbyter to be a Bishop. But in reality these are three *different types* of Ministries and not mere stepping stones, one leading to another.

Through the Dioconal Service of the Church many kinds of work in the Church could be done as development programmes or community welfare.

The Presbyters could be used with great profit for the teaching ministry of the Church. Without a teaching ministry, our preaching often becomes heresy. Laymen and women too could be set apart for the sacramental service of the Church.

*A meaningful Ministry* that would serve the needs of the community is a great need in our Church today.

**The Episcopacy**

Finally the historic episcopacy is the focal point of unity in the local leadership. There were *Five* distinct groups during the time of St. John:—

(a) The Jews
(b) Those who accepted the Jerusalem Council's decisions.
(c) Gentiles who believed in the freedom of the gospel.
(d) a group which believed in the freedom of the Spirit — "The wind bloweth where it listeth."
(e) a group that accepted the Ministry as a gift of the Church.

When Persecution came, only the fifth group could stand. The early martyrs we find were Bishops They become a rallying point: they were a father in God to all people.

**Local Expression**

Above all, we must remember that the Church is of the World. We have to be witnesses, in Judea, in Samaria, to the end of the World." The unity of the Church has to find local expression in our sharing of one another's burden. The gospel must burst in our country through our linguistic and cultural barriers and reach the furthermost points of Sri Lanka.

## Transmission Station at Pidurutalgala

Two helicopters from the air-craft carrier *USS - Ranger* (of the U S Seventh Fleet) has been engaged recently in exploring the possibility of lowering a six ton generator to the summit of *Pidurutalagala.*

The helicopters have to fly at a height of 8200 feet to lower the equipment while they hover virtually stationery over the peak for 45 minutes.

The high powered helicopters engaged in the operation will send a downward wind blast of 120 MPH which could pose a danger to people and property in the vicinity of the mountain peak.

If the decision is finally made, the date fixed for the operation is May 4. The transmitting station is a gift from Japan to Sri Lanka.

Mr. T. Pathmanathan, acting Secretary of State was sent on the exploratory reconnaissance flight on 6-3-81 along with admiral Kirksey of the USS Ranger.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 13th March, 1981,